வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.87/2024 |
| வழக்கு சாட்சி | : | Pw 9 |
| நாள் | : | 18.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரா | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | அன்பழகன் | தொழில் | : | Doctor |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர் இல்லை மனு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலாஜா அரசு மருத்துவமனை ராணிபேட்டையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 28.12.2021 அன்று வாலாஜா அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மருத்துவராக பணியில் இருந்தபோது மங்களா, வயது 37 என்ற பெண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆர்.கே.பேட்டை காவல்நிலைய குற்றஎண்.656/2021 என்ற காவல் ஆய்வாளர் திரு.சின்னதுரை அவர்கள் அளித்த கடிதத்தின் மூலமாக பெற்று 28.12.2021 அன்று பகல் 12.45 மணிக்கு பிரேதத்தை பரிசோதனை செய்து பிரேத பரிசோதனையை தொடங்கினேன், பிரேதமானது விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. பிரேதத்தின் மீது **வெளிப்புற காயங்கள் முறையே**

1) வலது மார்பகத்தில் 7x2x8 cm அளவில் நீள்வட்ட வடிவத்தில் வலதுபுற மார்பகத்திலிருந்து ஆழமாக கீழ்புற குத்துகாயம் காணப்பட்டது.

2) வலது வயிற்றில் 3x1.5x5cm அளவில் நீள்வட்ட வடிவத்தில் வலதுபுற ஆழமாக குத்துகாயம் காணப்பட்டது.

3) வலது பக்க இடுப்பில் 7x1.5 cm குத்துகாயம் காணப்பட்டது.

4) வலது மேல்புற முன்கையில் 9x2cm ஆழமான குத்துகாயம் காணப்பட்டது.

5) வலது முழங்கை பள்ளத்தில 2x1cm அளவில் ஆழமான குத்துகாயம் காணப்பட்டது மற்றும் இரத்த நாளம் கிழிந்து காணப்பட்டது

**உட்புற காயங்கள் முறையே**

பிரேதத்தின் தலையை பிரித்து பார்த்ததில் மண்டை ஓட்டில் எந்தவித காயமும் இல்லை மற்றும் மூளையிலும் எந்தவித இரத்த கட்டிகளும் இல்லை. தொண்டை எலும்பு முறிவு எதுவும் இல்லை. இதயம் மற்றும் நுரையீரலில் எந்தவித காயமும் இல்லை. கல்லீரலில் மேல் பாகத்தில் 7x 5 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது. வயிற்றில் எந்தவித காயமும் இல்லை. வலது சிறுநீரகத்தில் ஒரு வெட்டுகாயம 3x2cm அளவில் மேல்புறமாக இருந்தது. சிறுகுடல் எந்த காயமும் இல்லை. கர்ப்பபை வெறுமையாக இருந்தது.

பின்பு பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை மாதிரிக்காக இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி பார்த்து அதன் ஆய்வின் முடிவில் பிரேதத்தில் எந்தவித நச்சுப பொருட்களும இல்லை என்று சான்று பெறப்பட்டது. இறுதியில் இறப்பிற்கான காரணம் அதிர்ச்சி மற்றும் உடல் உள்ளுறுப்புகளில் ஏற்பட்ட அதிகபடியான இரத்தபோக்கு என்று பிரேத விசாரணை கருத்துரு அறிக்கையை அளித்தேன். இந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.10 ஆவணத்தில் எத்தனை மணிக்கு இறந்தார் என்ற விபரம் குறிப்படவில்லை என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2025.11.18 10:21:40 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.